உ

கடவுள்துணை.

# நாகமசூளப்பநாய்க்கன்காதல்.

இவை.

சுப்பிரதீபக்கவிராயரால்

பாடப்பட்டதை.

மார்க்கலிங்கமுதலியாரால்

முன்பதிப்பித்ததைப்

பிழையறப்பரிசோதித்து,

பிடாரித்தாங்கல்.

நாராயணசாமிமுதலியார் குமாரர்

## சிதம்பரமுதலியார்

அவர்களாற் றமது

சிரோன்மணிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௵1896

சென்னை - பெரம்பூரைச்சார்ந்த குயப்பேட்டை படவெட்டம்மன்
கோயில்வீதி-64-65-வது நெம்பர்வீடு.

உ

சிவமயம்.

# கூளப்பநாயக்கன்காதல்.

## காப்பு.

### வெண்பா.

பேராரும்பெஞ்சைப் பெரியநாகேந்திரன்மேற்
சீராரும்காதலையான் செப்பவே—நேராரும்
அக்கனிதரச்சொலிமு னப்பனைவலத்தில்வரும்
கைக்கஜமுகக்கடவுள் காப்பு.

பொன்மாதுமேவுதிம்ம ராயரருள்பூண்டிருக்கும்
நன்மானிதிபெரிய நாயகன்மேற்காதல்சொல. ௧

வந்துறவுசொன்மதுர வாக்குதவியெப்பொருளுந்
தந்துதவவேண்டுமெங்கள் தந்திமுகத்தோனே. ௨

ஆளும்பெருமா ளகோபிலமால்மெய்யருளெந்
நாளும்பெரும்பெரிய நாயகன்மேற்காதல்சொல. ௩

ஏடுமணிவடமு மேந்துஞ்சரஸ்வதியே
யாடுமயிலேறிவரு மையனேமுன்னடவாய். ௪

கோமுனிவர்கொண்டாடுங் கூடற்பரஞ்சோதி
மாமுனிவர்செம்பொன் மலர்ப்பாதநான்மறவேன். ௫

நாட்டும்புகழ்பெரிய நாயகன்மேற்காதலைநான்
கூட்டுகவிநாவலர்முன் சொல்லத்துணிந்ததுதான். ௬

தானந்தவயோக தத்துவமில்லாவொருவன்
ஞானந்தெளிந்தவர்க்கு நல்லறிவுசொல்வதொக்கும். ௭

தெள்ளமிர்தமூட்டியுரை தித்திக்கத்தார்வளர்த்தோர்
கிள்ளைகுழறுமொழி கேட்டுமகிழ்வதுபோல். ௮

நன்னயவில்வேள்பெரிய நாகேந்த்ரனென்கவியி
லென்னவழுக்கண்டாலு மின்பமெனக்கொண்டருள்வான். ௯

தேனளந்தகானவர்க்குத் தேவராமுதளக்க
வானளந்துநிற்கும் வராககிரிவேந்தன்.

கன்னியமுனையொடுங் கைகலந்துநின்றதுபோற்
பொன்னிகலந்த புனற்குடபமாநதியான். ௧௧

வண்ணக்குலைமுலையார் மஞ்சள்நீராரோடிப்
பண்ணைப்பயிர்வளர்க்கும் பாண்டிவளநாடன். ௧௨

வட்டமதிக்களங்க மறத்தடவுகல்போல
இட்டகொடியாடு மியல்சூழ்நவபுரியான். ௧௩

கொத்தார்கருங்குழலார் குத்துமுலைபாயமணி
முத்தாரம்பின்னவிடு முல்லைத்தொடைமார்பான். ௧௪

ஓகைதந்துபோர்களத்தி லுட்புகுந்துதான்முடுகி
வாகைதந்துமீண்டுவரும வாகைநடனப்பரியான். ௧௫

சண்டையிற்பொருங்கெடித்த லந்தகர்த்துவஞ்சரைக்கைக்
கொண்டெடுத்தறைந்துரைப் புகும்பவுக்ரகுஞ்சரத்தான். ௧௬

விண்பிறையைவெல்ல நிலமீதின்முளைத்தெழுந்த
தன்பிறைபோலோங்குந் தவளக்குடையுடையான். ௧௭

உடைதிரைகள்குமுறுகட லெனவியுமுகிலிடியுமென
வடையலர்கள்செவிசுடைய வதிருமெலிமணிமுரசான். ௧௮

அஞ்சினர்வாக்கிலிருந் தப்புபோலோடிமட்டு
மிஞ்சினர்மார்புருவி வீம்படக்குமாணையினன். ௧௯

வட்டநிலம்புரக்கு மாரன்குமாரவர்க்கப்
பட்டமெனக்கட்டிவைத்த பட்டாபிஷேகபரன். ௨௰

மிக்கவருட்சொக்கேசர் மீனாட்சிதம்மருளால்
திக்குவிசயஞ் செலுத்துகின்றசெங்கோலான். ௨௧

சிற்றமுடனேதான் சிவிகையிலேறுமுன்னே
வேற்றரசர்பின்னிடைப்போர் வென்றுவருஞ்சேனையினன். ௨௨

கற்கோட்டையென்றவர்மேற் கண்சிவந்துகண்டவர்செம்
பொற்கோட்டையென்னப் புகழுநிலைகோட்டையினன். ௨௩

சிந்தமகூளேந்த்ர ஜெகராஜன்கண்மணிபோல்
வந்ததுரைசிங்கமெங்கள் மால்பெரியநாகேந்த்ரன். ௨௪

வாணிபுகழ்வல்லரக்கர் வார்குலத்தைக்கொண்டுவந்த
தோணியெனும்பென்சைத் துரைபெரியநாகேந்த்ரன் ௨௫

பொன்னிலங்கவச்ரப் பொடியிலங்கப்பொற்கதவு
முன்னிலங்கப்பின்னிலங்க முத்திலங்குவாசலினான். ௨௬

ட்டகடமானத் தொலிமுழங்கப்பேரிகைதம்
டமுழங்கப் பரிமுழங்குவாசலினன். ௨௭

கட்டிவருஞ்சிங்களத்தார் கப்பம்வரக்காரனை
குட்டிவரச்சினர்துறை கொண்டுவரும்வாசலினான். ௨௮

ஆடைவழங்க வணம்வழங்கயாசகர்க்கு
மாடைவழங்க மனுவழங்கும்வாசலினான். ௨௯

சேலாடுங்கூர்விழியார் சென்றாடக்கைவசந்தன்
கோலாடப்பங்கயப்பெண் கூத்தாடும்வாசலினான். ௩௰

மாமறைநூல்பொய்த்தாலும் வாதிரர்பொய்த்தாலும்
சோமரவிபொய்த்தாலுஞ் சொன்னமொழிபொய்யாதான் ௩௧

அண்டர்தருவுக்கு மரும்காமதேனுவுக்குங்
கொண்டல்தனக்குங் கொடையயிற்றுசெங்கரத்தான், ௩௨

சித்தசராஜேந்த்ரன் திருமலைகண்டமன்னன்
மைத்துனவேளாக வரும்பெரியநாகேந்த்ரன். ௩௩

நீளும்பெருவாழ்வு நீதிகளுமேலோங்க
ஆளும்புவிபுரக்கு மந்நாளிலேயொருநாள். ௩௪

ஆரணஞ்சேர்வையை யருந்திர்த்தந்தானுடி
நாரணனைத்தாள்போற்றி நாமதீர்த்தம்பருதி ௩௫

மிக்ககனகாரீடப்பேர் வித்துவசனங்கள் துரை
மக்களுடனின்பரச வர்க்கவமுதருந்தி. ௩௬

சந்தனக்கஸ்தூரி சவ்வாதுசதம்பம்பூசிச்
சுந்தரஞ்சேர்முத்துத் துராயிலங்கப்பாகைகட்டி. ௩௭

மாணிக்கம்பச்சை வயிரவயிடூரியத்தா
லாணிப்பொன்னூற்சமைத்த வாபரணமுந்தரித்து. ௩௮

சங்கீதம்பாடச் சகலஜனமும்போற்றச்
சிங்காசனக்கொலுவிற் றேவேந்திரன்போலிருந்தான். ௩௯

அந்தமணிமண்டபத்தி லாஸ்தானந்தன்னிலையன்
சிந்தையுற்றுவேட்டையின்மேற் சென்றுவரவேண்டுமென்று, ௪௰

கட்டியறைநோக்கிக் கனவேட்டைக்காரருக்கும் .
பட்டணத்துசசேனை பதிகளுக்குஞ்சொல்லுமென்றான். ௪௧

அங்கிருந்தகோமா னரண்மனையினுட்புகுந்து
தங்கரேகைகென்னத் தயங்குநிசார்தொட்டிறுக்கி, ௪௨

துப்பட்டாகட்டிவச்சிரச் சோடிட்டுத்தூணிகட்டி
சொப்பிட்டாற்கச்சை யுடைப்பட்டையூடுகட்டி. ௪௩

வர்ணமணியாழி வனசமலர்க்கையிலிட்டுச்
சொர்ணமயமாச்சமைத்த தோர்க்கவசங்காலிலிட்டு. ௪௪

வாய்ந்தவிரைவிட்டால் மருவலர்கள்மார்புரையாய்ப்
பாய்ந்தசமதாடு பாங்கணைத்துவிற்பிடித்து ௪௫

கேழல்புலியானைக் கெர்வங்களையடக்க
வாளிமலைமுழைவிட் டாவித்தெழுந்ததுபோற் ௪௬

குள்ளிருந்தகூர்நடுவேற் போசனரண்மனையி
னுள்ளிருந்துகோட்டை யொலிமுகத்துவாசல்வந்தான் ௪௭

கொற்றக்குடைபிடிக்க கொம்பூதப்பேரிகையும்
வெற்றிமுரசுந்தொனிக்க வீரசின்னந்தான்முழங்க ௪௮

காலின்கடுமைதனைக் காற்கடுமையாக்குமிதன்
காலின்கடுமையெனுங் கந்துகமேற்கொண்டருளி ௪௯

வெற்றிவடிவாள்பிடித்து வெம்பரியின்மீதேறிச்
சுற்றமெனச்சுற்றுந் துரைமக்கள்சூழ்ந்துவர ௫௰

வீரியப்பிரதானிகளு மெச்சுதளகர்த்தர்களும்
காரியப்பேர்பணியக் காரர்கருணீகர்களும் ௫௧

தாக்குதுடியுழிப்ர தாபவசீகரரும்
ஆக்கமிகுஞ்சர்வை யானகுறிக்காரர்களும் ௫௨

அச்சமில்லாராணுவப்போ ரத்தனையுஞ்சோடிகட்டிக்
கச்சைகட்டியாயுதமும் கையுமாய்முன்னடக்க ௫௩

சிங்கத்தையானையுஞ் சென்றுகுத்தியெங்கோமான்
தங்கப்பதக்கந் தனைவாங்கவேண்டுமென்றும் ௫௪

கண்டப்பெரும்புலியைக் கைவேலாற்கொன்றுபுலித்
தண்டைமிகுவிருது தான்வாங்கவேண்டுமென்றும் ௫௫

துட்டஞ்செய்யும்புலியைச் சுட்டங்கவெம்புலித்தோ
லொட்டும்பரிசைக் குறித்துவரவேண்டுமென்றும் ௫௬

வெண்கவரிவெங்கள்திம்ம ராயருக்குவீசவெள்ளை
வண்கவரிமானைவெட்டி வால்துணிக்கவேண்டுமென்றும் ௫௭

வைத்திடும்வைப்பாட்டிபிள்ளை மார்புக்குடைமைபண்ணக்
குத்திப்புலிநாகங்கள் கொண்டுவரவேண்டுமென்றும் ௫௮

கொண்டைவிளைய குடியாள்முடிதயிர்க்கு
மண்டுகருங்கவரி வால்துணிக்கவேண்டுமென்றும் ௫௯

வாய்த்தகரடி மணியீரற்பிச்செடுத்துக்
குத்திக்கிடுமருந்து கூட்டியிடவேண்டுமென்றும் ௬௰

ன்ஞென்றொருவர்மன துற்றுச்சிலரேக
ன்றிவெடிக்காரர் வேற்காரர்முன்னடக்க ௬௧

தானைபிடித்த தவளப்பெருக்கமுயர்
வானம்விழுதுவிட்ட வண்ணமாய்முன்னடக்க. ௬௨

கொண்டேகுந்தன்மேளக் கொள்கைபோற்பேசுமுகி
லுண்டோவிலையோவென் றெட்டகமஞ்ஞைந்துவர. ௬௩

கொட்டுந்துடியுங் குறித்தகறிக்கொம்புகளும்
கட்டும்பெருவலையுங் கைவேட்டைக்கத்திகளும். ௬௪

காட்டுப்புலிக்கழுத்தைக் கவ்வும்புலிபோலே
கூட்டமிட்டஞானிகளுங் குத்தீட்டியுங்கவணும். ௬௫

சால்வயிறுமூன்றுமுழத் தாடிகளுஞ்செந்தலையுங்
காலிலிடுதோலடியுங் காங்கிட்டகச்சையுமாய். ௬௬

கானவர்கள்வந்துகண்டு கைகுவித்துமுன்னோடச்
சேனைநடுவெள்ளைச் செயடாலிணைத்துவர. ௬௭

போயனுமன்பாய்ந்த புகழ்பெருமற்கதிரைப்
பாயத்திரிவதுபோற் பங்கருடடாலேக. ௬௮

சந்த்ரோதயம்போற் றபங்குஞ்சுருட்டிவரச்
செந்தூளிகண்டுவெட சினங்குடிவங்க. ௬௯

தம்பட்டவோசைத் தனக்குமதங்கலங்க
கொம்புத்தொனிகேட்டுக் கொச்சிமலையேற ௭௰

மங்களஞ்சேர்பெஞ்சைநகர் வாழ்பெரியநாகேந்த்ரன்
எங்கள்பிரான்வேட்டைக் கெழுந்தருளுமவ்வழியில் ௭௧

போய்த்தோன்றிடத்திருந்து போய்வலத்தோர்பூமரத்தில்
வாய்த்தபேடொன்றை மருவிக்குரலெழுப்ப. ௭௨

மண்டலிகர்கண்டனெனு மால்பெரியநாயகவுத்
தண்டமதுகண்டுநகை தந்துமனமகிழ்ந்து ௭௩

ராசசகுனமென்ன ராசேந்த்ரன்முன்னோடி
யோசனையினாற்சகுன வுண்மையறிந்தானொருவன். ௭௪

வந்தெதிரேபேர்த்து வலம்பாயக்கண்டதனால
முந்தவிந்தவேட்டை முழுவேட்டையாய்க்கிடைக்கும். ௭௫

குக்கில்வனப்பேட்டைக் குரலெழுப்பிக்கூடியதாற்
கைக்குள்வசமாகவின்றேற் கன்னிமணங்கூடுமென்றான். ௭௬

அவ்வார்த்தைசொல்ல மகாராஜனுக்கூளேந்த்ரன்
மைவாய்த்தபன்றி மலைச்சாரல்வந்தணுகி. ௭௭

நாலிடமுங்கானவரை நாடிவலைகட்டவிட்டு
கோலியகப்பட்டாப்பிற் குழற்காரரனைநிறுத்தி. ௭௮

ஏதும்பரிவிட் டிறங்கிப்படைக்கலிப்பு
நீதுந்தொனிமுரசு மேகங்கள்போன்முழங்க.

வேலாளும்வில்லாளும் வெல்லுமெறியிட்டியிக்
காலாளுமாய்ப்பரந்து காட்டைக்கலைத்துவிட்டார். ௮௰

பன்றி முயல்கரடி பாய்ப்புலிபுல்வாய்கடமா
ஒன்றேடொன்றுநட்டுண் டுலைந்துகலைந்தோட. ௮௧

எவ்வாறும்வேலா லெறிவாருமொன்றையொன்றை
வைவாருஞ்சுற்றி மறிப்பாருமாய்நெருங்க. ௮௨

கட்டாப்பில்வந்த கடமாவைபின்வாங்க
ஒட்டாமற்குத்தி யொளிபிருந்தபேரிமுக்க. ௮௩

சுட்டபுகைவழியே தூக்கவரும்பன்றியுடல்
தட்டுருவியோடத் தகட்டலையில்வேல்பாய. ௮௪

வாலடித்துமேல்பதுங்கி வாய்பிளக்கவாய்கிழிக்க
வேல்பிடித்துவீரர்குத்த வீழ்புலிக்குமேல்துடிக்க. ௮௫

வலையில்விழுகரடிமுயல் மரையின்மிசைஞமலிவிழ
அலகின்மிசைபிடரின்மிசை யடிகள்விழவுடல்பதற. ௮௬

செவ்வியோன்வேசிகையிற் சிக்கியுழல்வதுபோற்
கவ்விடநாய்க்காலிற் கவரிமான்வீழ்ந்துழல. ௮௭

கூடுமயிர்க்கூட்டங் கொடுக்கின்றதாதாவைப்
பாடும்புலவோர் கலிபோற்பறந்தோட ௮௮

வட்டமுலைமின்னர் மயக்கறுத்தயோகியைப்போற்
கட்டுவலையறுத்தோர் கான்வேதிபோனதுவே. ௮௯

கொட்டமிடும்புலியைக் குண்டுதுன்றுங்குழலால்
சுட்டுதொனிவெற்பைத் தொடர்ந்துசிலையோட, ௯௰

எம்மானிடப்புலியு மிந்துமுயலும்மானும்
கைம்மானுஞ்சற்றே கலங்கிமனந்தேற, ௯௧

இவ்வண்ணமைய னியல்வேட்டையாடவொரு
செவ்வண்ணமான்வலையிற் சிக்காமலேகுதித்து, ௯௨

பற்றிவரும்பேர்க்கும் பதிகுழக்குமெட்டாமல்
உற்றகவிவாணரைக்கண் டோடுமுலுத்தரைப்போல், ௯௩

போங்கடுமைகண்டுபுகழ்பெரியநாகேந்த்ரன்
வாங்குசிலையும் வடிக்கணையுமாய்விரைந்து. ௯௪

மானேடப்பற்றியென்று வங்காகுராமனைப்போல்
கானேடப்பின்னேடிக் காவிக்குதிகுதித்து, ௯௫

ரிலிறகில்லாத பட்சிபோற்சொல்லநெடுங்
ரந்தொடர்ந்து தொடுங்கணைக்குபூசையிட்டான், ௯௬

மால்தொடர்ந்தமானோர் மயிலைப்பிரித்ததையன்
கால்தொடர்ந்தயானோர் கருங்குயிலைக்கூட்டியதே ௧௭
சிக்கத்தின்குட்டி சிலையேர்திச்செல்வதுபோல்
அங்கொருபூங்காவில் விடாயாறத்தனிப்புகுந்தான் ௧௮
தான்றுவடஞ்சுனைநீர் தோய்ந்துமலர்தாலளைந்து
தென்றல்வந்தேனையன் திருமுகத்தின்வேர்வகற்ற ௧௯
கற்பகக்காவிந்திரனைக் கண்டிமலர்சிந்துதல்போற
பொற்புடையோன்மெய்குளிரப் பூங்காவைப்பூச்சொரிய ௨௰
சந்தனத்தின்மீதிருந்து சஞ்சரிக்கும்பைங்கிளிகள்
சிந்தமன்சேய்க்கின்பம்வரச் சிந்துகவிபாட ௨௧
இங்கிருக்கும்வேளைநல்ல யேகாந்தவேளையென
மங்கைநல்லாள் தூதுவிட்ட வண்டுபோல்வண்டிரைய ௨௨
மையல்கொண்டமன்னனுக்கு மாலையிடவந்துநின்ற
தையலார்போலச் சரக்கொன்றைக்கொம்பிலங்க ௨௩
நக்கோன்துரைபெரிய நாகேந்த்ரனவ்வனத்தில்
சிங்காரம்பார்த்துலவிச் சிந்தைமகிழ்போதில் ௨௪
சாதிபொருநான்கின்முதற் சாதிபதுமினியா
மாதுநவரத்தின மாலையெனும்பெண்பெருமாள் ௨௫
மதனகலைவாணி மதனசுரதாணி
மதனரதிக்கேணி மதனசுபகல்பாணி ௨௬
காயக்குருபீடங் காமக்கொலுக்கூடங்
காமகிரீடமின்பக் காமக்கடலோடம் ௨௭
மாமுனிவர்வேதவங்க மாமுனிவரத்தரங்க
மாமுனிவருதசங்க மாமுனிவர்பிராணலிங்கம் ௨௮
தெய்வரதிதேவி தெய்வகுளவாவி
தெய்வச்செழுங்காவி தெய்வமலைச்சஞ்சீவி ௨௯
கமியன்கையாலடித்துக் காச்சிவெட்டித்தீராமல்
செம்மலரோன்கைமலரால் செய்துவிட்டபொற்பாவை ௩௰
வாய்பேசாவண்ண மதிலொட்டிலலாமல்
தாய்பேசப்பேசியின்பந் தந்துலவுருபசித்திரம் ௩௧
கையாற்பிடித்தொருவர் கட்டவிதழ்கன்றாமல்
மையார்குழலார் மடியிருக்கும்பூமாலை ௩௨
காற்றிலடிப்பட்டலைந்து கண்முத்தரும்பாமல்
போற்றிமடவார் வளர்த்தெடுத்தபூங்கரும்பு ௩௩

மொய்க்குமணக்குன்றி முங்கருகிவாடாமல்
மெய்க்குணமெச்சாளும் வீசுமருக்கொழுந்து ௱௧௪
பொங்கிச்சிவந்து கழுத்துப்புழுங்காமல்
தங்கநிறமாகச் சமைந்தமணப்பாகு ௱௧௫
ஓங்குமலைக்காட்டி லுள்ளிருந்து தூங்காமல்
தூங்குசப்பரமஞ்சமிசை தூங்குநவரசத்தேன் ௱௧௬
மொய்த்தமலைக்காட்டு முள்ளுடலையாமல்
மெத்தையின்மேலேறி விளையாடுந்தோகைமயில் ௱௧௭
கொம்புதோறும்போய்த்தாவிக் கூவித்திரியாமல்
அம்பொன்மணியூசலிருந் தாடுங்குயிற்பேடு ௱௧௮
கொஞ்சிமொழிகுழறிக் கூட்டிற்கிடவாமல்
செஞ்சொன்மதனகலை செப்புங்கிளிப்பேடு ௱௧௯
கன்னியற்குத்தன்னடையைக் கற்பிக்கப்பேடையன்னந்
தன்னைநடைபயிற்றுஞ் சாதியனப்பேடு ௱௨௰
தேய்ந்துபோகிக்கச் சேர்ந்தகுணம்போகாமல்
தோய்ந்துபோகிக்கத் துலங்குகின்றசாதிமுத்து ௱௨௧
ஒப்பமிட்டசெப்பி லொளித்துக்கிடவாமல்
செப்பமிட்டசெப்பிரண்டுந் தாங்கிவருஞ்சீவரத்னம் ௱௨௨
நீறணைகாம ளிமலனார்மீதில்வைத்த
மாறுமணவயிர மாற்றவருமாவயிரம் ௱௨௩
கண்ணுக்குட்கண்மணிபோற் கண்மணிக்குப்பாவையைப்போற்
பெண்ணுக்குப்பெண்ணாசை கொள்ளவந்தபெண்ணரசு ௱௨௪
அன்றுகுணமாலையெனு புன்பானபாங்கியைப்பார்த்
தின்றெனதுகண்ணி லிடக்கண்துடிக்குதென்றாள் ௱௨௫
தோளினிடப்பால் துடிக்குதெனவுரைத்த
வாளிதொடுவெட்டிப் படித்தவரிவிழியாய் ௱௨௬
கன்னியழியாத காரிகையேயின் றுனக்குச்
சொன்னேனதிகசுப சோபனமுண்டாகுதென்றாள் ௱௨௭
ாங்கியுரைகேட்டுமெற்றைப் பாங்கிமார்தம்முடனே
பூங்குழலாள்காவின்மலர் பூவெடுக்கவேண்டுமென்று ௱௨௮
பச்சைப்பரிமளங்கள் பாங்காய்க்கலந்தரைத்து
கொச்சிமஞ்சட்பூசிக் குளித்ததிருமேனியின்மேல் ௱௨௯
ர்ந்துபுனுகு சவாதுகதம்பம்பூசிக்
ாத்திரவெண்சலவை கண்டையிட்டசேலைகட்டி ௱௩௰

காவிவரிநெடுங்கட் காரிகைக்குப்பாங்கியர்கள்
சீவிவகுப்பெடுத்துச் சேர்த்துக்குழன் முடித்து ௱௩௧
மைமெழுகிப்பொட்டெழுதி வட்டமிட்ட பூண்முலைக்குத்
தொய்யிலெழுதித் துணையடிக்குப்பஞ்செழுதி ௱௩௨
ஆடகட்பொன்மெட்டிட் டழகுவெள்ளித்தண்டையிட்டுப்
பாடகங்களிட்டுப் பசும்பொற்சதங்கையிட்டு ௱௩௩
முத்தாரமேகலைமேன் மூன்றடுக்குப்பொன்னரைஞாண்
வைத்தார்க்கட்டி மருங்கொடியாணையிட்டு ௱௩௪
செய்யகொடிபவளஞ் செம்மணியளின்றதுபோல்
கைவிரலுக்கேற்றரத்னக் கல்மோதிரங்களிட்டார் ௱௩௫
கட்டிப்பவளக் கனகவளைபொற்கடகந்
தட்டுச்சரியைச் சரியாகக்கைக்கணிந்து ௱௩௬
பட்டுரேவிக்கையிட்டுப் பட்டயப்பொற்காறையிட்டு
வட்டமுலைமார்பிலங்க வச்ரச்சவளியிட்டார் ௱௩௭
மோகனப்பொன்மாலையிட்டு முத்துமணிமாலையிட்டுப்
பூசத்தைவச்ரமணிப் பூஷணங்களால்மறைத்தார் ௱௩௮
வாய்க்குமொருவட்ட மதியொருமுத்தின்றதுபோல்
மூக்குகதிமுத்து முகத்துக்கிணங்கவிட்டார் ௱௩௯
கொந்தலைப்பொன்னோலையிட்டுக் கொப்பிட்டுவாளியிட்டுச்
செந்திருவிற்கேற்கத் திருவும்பிறையுமிட்டு ௱௪௰
கொண்டைச்சுருட்டிமுத்துக் குச்சிட்டுக்குப்பியிட்டுத
தண்டப்பிறைக்கணங்கச் சுட்டியொன்றுகட்டிவிட்டார் ௱௪௧
பூட்டினார்பொற்சிலைக்குப் பொன்னிடுவார்போலுடைமை
சூட்டினார்பூமாலை சுற்றினார்தோழியர்கள் ௱௪௨
ஞாலம்புகழு நவரத்னமாலையினாள்
கோலஞ்சிறந்தமலர் கொய்யவெனத்தானடந்தாள் ௱௪௩
லங்காரமாலைமுத்து மாலைகுணமாலை
சிங்காரமாலை திகழ்மோகனமாலை ௱௪௪
சப்போசவல்லி சரசவல்லிகாமவல்லி
அம்போருக்ககண் ணமிர்தவல்லி லீலவல்லி ௱௪௫
மோகரத்னமாதுரத்ன முத்துவசந்தரத்ன
நாகரத்னமென்னுமந்த நல்லவுயிர்ப்பாங்கியரும் ௱௪௬
தானுமாயந்தமலர் சண்பகப்பூங்காவனத்தின
மானினங்கள்சூழ வரும்பிடிபோல்வந்தணுகி ௱௪

கொய்யுமலர்வண்டேமூழ்ந்த கோகனகப்பூவெனச்செங்
கைம்மலராச்சுற்றுங் கடிமலர்பூவெடுத்தாள் ௱௪௮
பூங்கொடிபோலின்னலவிப் பொன்னனையாள்பூவெடுத்தப்
பாங்கிமாரெல்லாம பரந்தேடிப்பூவெடுத்தார் ௱௪௯
வாளைபொத்தசெங்கருங்கண்மாமனூர்மதராஜன்
பாளையத்தைக்கொள்ளையிடும் பண்பாய்மலர்பறித்தார் ௱௫௰
அங்குநின்றபெண்களெல்லா மங்கங்கேபோய்மறைய
இங்குநின்றபேதை யிணையபிரிந்தமான்போல ௱௫௧
மெல்லத்தனிநடந்து வெட்சியிருவாட்சி
மல்லிகைசெவ்வந்தி மலர்ந்தபிச்சிப்பூவெடுத்து ௱௫௨
தோட்டிப்பூமுல்லைமுதற் றாமகொடிப்பூவெடுத்துக்
கோட்டுப்பூமீதிலகத் தொம்பனையாளமாலானாள் ௱௫௩
காவியிரணடிருக்க கஞ்சன்மலராஞ்சிருக்க
பூவினிறங்குன்றும் புனமுருக்கம்பூவிருக்க ௱௫௪
கோங்கரும்பிரண்டிருக்க கோவையிட்டமுல்லைமுகைப்
பூங்குமுதத்துள்ளிருக்கப் பூஞ்சண்பகமிருக்கப் ௱௫௫
பூகலத்திலேதான் பொதிவைத்திருப்பவர்போல்
மாதாசிபூத்த மரநதோறுஞ்சென்றுசென்று ௱௫௬
சாதிமருஞ்சண்பகமே தாருவபூந்தாதகியே
கோதிக்குழல்முடிக்கக் கோலமலர்தாரீரோ . ௱௫௭
மந்தாரையேசாதி மாயாமேமீசனது
சந்தாபந்தீரத் தரிக்கமலர்தாரீரோ ௱௫௮
பாதிரியேகாவிற் பனிநீர்ப்பருமரமே
மாதவியேநீயெனக்கு வண்ணமலர்தாரீரோ ௱௫௯
விண்ணுறநசபுன்னை விருட்சமேகுங்குமமே
அண்ணாந்துதீற்றுமென காமமலர்தாரீரோ ௱௬௰
அப்பிட்டகண்ணுறநன்றுவிட்டாருங்கனைநான்
கும்பிட்டேன்கோகிலங்காள் கொய்துமலர்தாரீரோ ௱௬௧
என்றவுரைகேட் டெழிற்குயிலும்பூங்கிளியுங்
கன்றியமனசாலயந்தக் காவினப்புறத்தொதுங்க ௱௬௨
பூமாத்திளிமலிமேலா பூங்கொடிபோனின்றலவித்
காமனைத்தங்குழலீதா வெனுருந்தியாகிநின்றாள் ௱௬௩
ரக்குயிளமுலைப்பெண் ணேகாந்தமாயிருக்க
சாந்தக்கவிராஜ்பெரிய நாகமகடேளேந்திரதுரை ௱௬௪

பண்டிதனைவென்ற பகைதீரக்காமனுக்குக்
கொண்டசிவனைவெல்லக் காமபுதேதேல்போல் ௱௬௫
வண்டிலவும்போதுமலர்ந்தபெருஞ்சோலைவளக்
கண்டிலவும்போதிலெதிர் கண்டான்விழிகுளிர ௱௬௬
நீராயின்னுளோ நிசநாகக்கன்னிகையோ
ஊராயின்னுளோ சுரலோகமேனகையோ ௱௬௭
கண்ணிமையுமண்ணிவிட்டா காணுமனந்திகைத்த
வெண்ணமகற்றியதா லிவ்வுலகிற்பெண்ணரசே ௱௬௮
என்றெடுத்துமின்னு னிருசெவிக்குமின்பமுறக்
குன்றெடுத்தபூங்காவிற் கோமானுரைக்கலுற்றான் ௱௬௯
ஊரேதிருக்கு முலகேதுமக்குத்திருப்
பேரேதுவார்த்தையொன்று பேசினலாகாதோ ௱௭௰
ஐவிரலுக்குள்ளே யமர்ந்தசிவனார்க்குத்
தெய்வவடிவெடுத்த சேயிழையுநீதாமே ௱௭௧
பற்றெழுப்புங்கையாற் பரனெரித்தமன்மதனை
வற்றெழுப்பிக்கொண்ட மகாசித்திநீதாமோ ௱௭௨
பண்டுகளருபம் பலரெடுக்கவேளாளைக்
கண்டுமணமாலையிட்ட காயகநீதாமோ ௱௭௩
தெய்வரம்பையின்னார் திருவழகெலாந்திரட்டிக்
கைவருந்தவேதனுமைக் கறபித்துவிட்டானோ ௱௭௪
என்பட்டமென்றுவரு மிந்திரனார்பட்டமெலாந்
தன்பட்டமாக்குஞ் சமத்தியாநீதாமோ ௱௭௫
தெண்டிரையிலோடிமலைச் சென்றேறிவாய்வெருவிக்
கொண்டலதிரிவதுங்கள் கூந்தலுக்குத்தோற்றலவோ ௱௭௬
தேய்ந்தபிறையுங்கள் திருநுதலையுலகிலே
ஆய்ந்தமணிச்சுட்டி யணிந்திருக்கக்காணேனே ௱௭௭
பூமன்வளைத்த புருவத்துக்குக்கந்தி
காமன்வளைத்த கருப்புருவமொப்பாமோ ௱௭௮
அவ்வேடங்கொண்ட கருங்கயல்போல்வேதனினி
எவ்வேதங்காணப் படைத்தானிருவிழியை ௱௭௯
சன்னதவேள்தீர்த்திப்ர தாபப்புரிந்தகொலை
வன்னமெனமுன்று மிருப்பதுங்கள்வாள்விழியே ௱௮௰
வல்லையப்போருக்கொதுங்கேன் வாள்வேல்படைக்கொதுங்கேன்
மெல்லிநல்லீர்நுங்கள் விழியம்புக்கஞ்சுற்றேன் ௱௮

தூக்குமூக்குத்திமுத்துத் தூங்காக்குமிழையுங்கள்
மூக்குக்குவமைசொன்னால் முத்தமிழோர்க்கொவ்வாதே ௱௮௨
யாங்கனிபோலவென்றும வள்ளைககாதெங்குமென்றும்
பாங்கிதுமைசண்டேல பல்கரிசைசென்சொல்வேன் ௱௮௩
வித்துமருந்துன்னையுங்கள் மெல்லிதழென்றுவித்திலே
முத்தங்கிடைக்குமதில் முததங்கிடையாதே ௱௮௪
இபமானைமென்றுலையி ரிந்துமுகத்துக்கோர்
உபமானஞ்சொல்ல வொருபொருளுங்காணேனே ௱௮௫
சங்கழுத்துமுங்கள் தனிக்கழுத்தென்றுவதிராய்
ஆங்கழுத்துமரேகை யதிற்பதியமாட்டாதே ௱௮௬
தோளுக்குமூங்கிலிணை சொன்னாற்பெருஞ்சோதி
நாளுக்குமின்மினியை நாவலருஞ்சொல்லாரே ௱௮௭
காந்தளவனஞ்சென்றதுங்கள் கைபோலுந்தானிருக்க
வாய்ந்ததவஞ்செய்து வரம்பெறுவோமென்றலவோ ௱௮௮
தம்புருவைமீட்டியிசைத் தந்திதனிமேலற்றறியாச்
செயபவளமுங்கள் சிறுவிரலுக்கொப்பாமோ ௱௮௯
வார்த்தைக்குததோற்ற வனக்கிளியின்மூக்குமுனை
சேர்த்தநகமென்றுவமை செப்பினுலொப்பாமோ ௱௯௰
பாவினியல்கண்டுபல பாடித்தெரிந்துபெருங்
காவியத்தைப்பாடிக் கருஞரங்கேற்றுதல்போல் ௱௯௧
முந்தசெழுங்கமலத் துள்ளேமுளைத்தெழுந்தேன்
சாதிச்சிமிள்படைத்துத் தாளவட்டந்தான்படைத்து ௱௯௨
வம்பைச்சமைத்து வடிவுகண்டுபால்யானைக்
கொம்பைச்சமைத்துக் குணஞ்சற்றதிலறிந்து ௱௯௩
தேங்காயைச்செய்து திரட்சிகண்டுபொற்குடத்தைப்
பாங்காகச்செய்து பணைப்பதிலேகண்டறிந்து ௱௯௪
விந்தைதருமேருமுதல் வெற்பெல்லாஞ்செய்தவள்கை
வந்ததற்பினுங்கள் வனமுலையைச்செய்தனளே ௱௯௫
காமனிமையாமல்வைத்த கண்கருப்புபாய்ந்ததுவோ
வாமமுலைக்கண்கண் மணிகருப்பையென்சொல்வேன் ௱௯௬
சூரியனுமிந்திரனுந் தும்பிமுகத்தோனுமுங்கள்
பாரமுலையின் பகையடக்கவோபிறந்தார் ௱௯௭
ஆலோவிரிதகனி லாவிலைமேற்பள்ளிகொள்ளு
மாலோவுரோம வகுப்பழகையென்சொல்வேன் ௱௯௮

வர்த்திச்சுழியை வலமாகச்சுற்றினுநீ
மூர்த்திச்சுழிகளுங்க ளுந்திசுழியாமோ ௱௯௯
மெல்லிகல்லீருங்களிடை மின்கொடிபோலுண்டெனவு
மில்லையெனவுமபடைக்க விரண்டுபிரமனுண்டோ ௨௱
வாதமூதற்சாதி வடிவிறலல்குலுஞ்செந்
தாமரைப்பூப்போலிருக்குஞ் சந்தேகம்வேறுமுண்டோ ௨௱௧
வானமுக்குறக்கல்லால் மண்டபமாமன்மதனுக்
மேகைமுழக்கிரங்கு மிடமென்றறியேனான் ௨௱௨
செவ்வாழ்கவ்விநின்ற சிரலவனேமுழந்தாள்
அவ்வராலைச்சுமந்த வாளைபோலென்னடிதான் ௨௱௩
அஞ்சுதலையறவோ பஞ்சுவிரலு படமோ
மஞ்சுவரக்கண்ட மடமயிலோ வுன்சாயல் ௨௱௪
பின்னழகைக்காணில்ரதிப் பெண்ணைமதனுமிலனே
முன்னழகைக்காணின் முனிவர்தவஞ்செய்வாரோ ௨௱௫
சேடியருமில்லாமற் றேன்மொழியிவ்வனத்தில்
நாடிவரப்பெற்றதுமுன் னென்செய்தமாதவமோ ௨௱௬
ஏதுமொருவார்த்தை யியம்புகிலீருங்களுரை
வேதமோகல்லாலின் மேவுசிவமந்திரமோ ௨௱௭
மேருகிரியுமக்த வெள்ளிமலையும்பார்க்க
கீருத்தரிக நெகிழவிடயாட்டீரோ ௨௱௮
கையணைவைத்துங்கள் கழுத்தின்மணமோந்துகொண்டால
ஐயமறச்சங்கமுக மாமேபலனலவோ ௨௱௯
புனைநற்றுகில்சற்றே புறம்போகச்செய்துவிட்டால்
அனந்தசயனத்தலத்தை யானறிந்துக்கொள்ளேனோ ௨௱௰
தாகமறமுத்தமொன்று தந்தாலுமதுசக்ர
வாகமுலைக்குமுத்த மாலையாச்சுட்டேனே ௨௧௧
என்மார்பிலங்கநக ரேகையைவைத்தாலுமது
பொன்மார்பிலங்கரத்ந பூஷணமாய்ப்பூட்டேனே ௨௧௨
பாதியுடலிற் பரமனொருபெண்ணைவைத்தான்
மாதொருத்திதன்னை மணிவண்ணன்மார்பில்வைத்தான் ௨௧௩
செங்கமலவேதனே தேன்மொழியைநாவில்வைத்தான்
உங்களைநானென்மனதுக் குள்ளிருத்திக்கொள்ளேனோ ௨௧௪
வாமத்தரவுமுலை மந்தாரமுந்தந்தானென்
காமக்கடலைக் கடந்தமிர்தங்காட்டேனோ ௨௧[illegible]

பட்டாடைக்கு மன்றுளத்தையென் றபரிசமா
விட்டால்முப்போக விளைவேற்றிக்கொள்ளேனே ௨௧௬
வாழைபடிமுக்காணி வட்டமெனக்களித்தால்
ஏழையுழுதுபயி ரேற்றிப்பிழையேனே ௨௧௭
வற்றாச்சமுத்திரமா மாரனரண்மனைக்குள்
அஸ்தாக்கிரமெழுதி யாண்மைசெலுத்தேனே ௨௧௮
ஆலடிச்செய்யோடா சடிவட்டம்விட்டால்முச்
சாலடித்தூக்கல்வெள்ளைச் சம்பாவிரையேனே ௨௧௯
தாண்டியிருகத் தனிவேட்டைவந்தவென்னை
மீண்டுமொருகாம வேட்டைவிளையாடவிட்டால் ௨௨௰
கொங்கைக்குழலைபற்றிக் குரவெழுப்பியேறிநடுப்
பொங்குகலைகுலையப் புல்லுமலையுள்ளாக்கி ௨௨௧
சாய்ந்தவிழி மணிரண்டுஞ் சண்பகக்காட்டிற்குதித்துப்
பாய்ந்துகுமிழோ டொதுங்கியின்றுபரதவிக்க ௨௨௨
மோகவலைக்குமறப்பிச்சிக்குமின்பமுற
வாகமலைப்பன்றி யடுத்தொருகைபாரேனோ ௨௨௩
மன்னிப்பாயென்னை வரவழைத்தாரீருமது
கன்னிப்போராகக் கலவிப்போர்க்கென்னைவிட்டால் ௨௨௪
காமத்தேரேறிநன்றாக் கட்டியிருகக்கலந்து
காமவேல்பாயச் சமரின்முனைகாட்டி ௨௨௫
முன்னணியும்பின்னணியு மொய்த்தகுழல்வகுப்பும்
பின்னிடைநன் றாவிடைப்ர தாபக்கொடியாட ௨௨௬
தண்டையொலிமேளந் தாளநெகிழ்ந்தகுழல்
வண்டுபுரங்கொடுத்த மாற்றலர்கள்போற்பறக்க ௨௨௭
வெம்பியென்னைப்பாய்ந்தடர விட்டகனபாரமெனும்
கம்பமதயானைக் கைப்பிடியாகப்பிடித்து ௨௨௮
சங்கமுழங்கச் சரிபோசப்போர்முடித்து
செங்கைக்கரும்புச் சிலமதனைவெல்லேனோ ௨௨௯
மேலுலகந்தன்னைவிட்டு மேதினியில்வந்தரம்பை
போலுமுங்கள்யௌவனமாய்பொய்கைதனிலென்னைவிட்டால் ௨௩௰
ஆடையொருபக்க மனையிற்கிடக்கவிதழ்
மூடிரண்டு முளரிநௌனமார்பழுந்த ௨௩௧
ஓர்தாமரைப்பூ வுகந்தென்முகத்தணைய
ஓர்தாமரைப்பூ வுலாவிமுலைகத்தடவ ௨௩௨

பின்னொருசெந்தாமரைப்பூப் பின்பிடரியூடுவரக்
கன்னிவாரற்சோடு கலந்திடுப்பினூடொதுங்க ௨௧௩
என்மீதுதாவி யிருகெண்டைபோராட
மென்மாமலர்க்குமுத மெல்லமெல்லத்தேனூற ௨௧௪
சைவலமோதப்பாற்குலையச் சங்கொலிப் பிழந்தெனது
மெய்குளிரத்தோய்ந்து விரகவிடாய்தீரேனே ௨௧௫
தங்கவிளையாட்டுத் தனிப்பிடமீதுசது
ரங்கவிளையாட்டுக் கழைத்திரேயாமாகில் ௨௧௬
கால்பலங்கொண்டேற்றியிரு காரானைமுட்டவிட்டு
காலுமுகத்து நடத்துபரிசுற்றவிட்டு ௨௧௭
எட்டெட்டிலுக்கு மிணங்கச்சகடேற்றித்
தொட்டதொட்டவாட்டமெலாந் தோராமல்வெல்லேனே ௨௧௮
காதோடுவாதாடுங் கண்மடவீரொன்றியிலே
சூதாடவென்னைவரச் சொல்லியழைத்திராகில் ௨௧௯
குங்குமக்காச்சோடிரண்டுங் கூட்டிக்கலந்தாடி
அங்கம்பசலைக்கா யத்தையும்போகவிட்டு ௨௨௰
விக்கைதருஞ்சிவப்பை மெல்லவாரிறுத்தி
அந்தக்கறுப்பையெல்லாம் பின்னையிலையவிட்டு ௨௨௧
ஒருக்காலிருக்காலோ டொப்பாறுமாறும்
பெருக்காகலக்கம் பிசகாமலேபாடி ௨௨௨
கண்யார்க்குநீங்கள்வெட்டிக் கட்டுத்தொடர்ந்தேறிப்
பண்பாகவிட்டிற் படுத்துவிளையாடேனே ௨௨௩
நற்காமபூசை நடத்திடவேநீங்கள்சொன்னால்
விற்காமதெய்வ விரதந்தனிலிருந்து ௨௨௪
மோகசமுத்திரத்தின் மூழ்கிமதன்மந்திரமும்
ஆகவுருவேற்றி யந்தக்கரணமுடன் ௨௨௫
கன்னலொடுதேமாங் கனியருந்திச்செவ்விளநீர்
தன்னைப்பருகிநித்திரை சத்துருவைத்தானகற்றி ௨௨௬
சாமஞ்சாமந்தோறுஞ் சங்காதத்துடனே
நேமமொடுபூசை நிறைவேற்றிக்கொள்ளேனே ௨௨௭
இன்னேரமென்சொற் கிரங்குவீரப்படியும்
மின்னேயுமைக்கலந்து மேவாமற்போவேனே ௨௨௮
ஓலைகட்டி யொதுக்காமலேவெளியில்
நாடியபொன்மானை நான்விட்டகல்வேனே ௨௨௯
தாப்பானகாடுந் தடவரையுஞ்சுற்றாமல்
வாய்ப்பாகவந்த மயிலைவிட்டுப்போவேனே ௨௩௰

வீண்டுசுற்றேன்சொரியு மென்கமலப்போதுகண்ட
வண்டுபோலிக்குண்டு மகிழ்பந்போவதுண்டோ ௨௫௧
காந்தர்கிரியமெனக் கண்டவுடனேயிணங்கித்
தோய்ந்திடுங்கல்யாணமாக சோபனகலியாணமன்றோ ௨௫௨
காறுநடலவன்விதனைக் கர்தனுர்கூடியதும்
மானுஞ்சட்த்திரைமை வாள்விசையன்கூடியதும் ௨௫௩
தாங்களேசம்மதித்தோ தந்தைதாய்சம்மதித்தோ
யாங்குயிலேயென்னை மருவுதேசாரியங்காண் ௨௫௪
முலைக்கோட்டையுள்ளமுத்து மோகனமேயென்னை
நிலைக்கோட்டைவேந்தனென்று நீர்தாமறியீரோ ௨௫௫
நாலுநவபுரியா ஞரியாசிரோமணிநீ
தானுநவரத்நமாலையென்றுற்றுழ்வாமோ ௨௫௬
என்றுபெருஞ்சூற்கொண் டிடாக்குமழைக்கெதிரே
சென்றுவருண செபஞ்செய்வதுபோல் ௨௫௭
தவ்விடத்தில்வைத்தமையல் தாங்காதாட்கிச்சைசொல்லி
வன்னவனைச்செங்கை தொடலுமயிர்க்குச்செறிந்தாள் ௨௫௮
போகனேனுமபெஞ்சைப் பெரியகோத்ரானுரை
நாகரிகயோக நவரத்நமாலையுடன் ௨௫௯
கொங்கலருமுல்லைக் கொடியருபல்லிவையும்
பைங்கொடிமானைவப் படர்ந்தமணிமண்டபத்தில் ௨௬௰
பூத்துச்சொரிந்தமலர்ப் பூம்பாயலின்மீது
சித்ரதியுபந்தமன்மதனும்போலிருந்து ௨௬௧
வாய்பிளவுருக்கிச்செங்கைச்சுருள்பகிர்ந்து
கோவைபிதழ்முத்தமிட்டுக்கொய்யுமலர்ப்பூமுடித்து ௨௬௨
கட்டியணைத்துக் கனிவாயிதழ்பருகி
வட்டமுலைபிடித்துவண்ணத்துகில்நெகிழ்த்தி ௨௬௩
ஆலிங்கனவிதங்களைந்துபுரிந்தரவம்
போலுங்கடிதடமாம் பூவைக்கனியாக்கி ௨௬௪
பொற்கொம்பும்பூங்கொடியும் பூண்டுதுவண்டாடுதல்போல்
சற்குநவசித்திரகரணவகைபாராட்டி ௨௬௫
குங்குமகதம்பமிடுகொங்கையினைகப்பதிப
மங்குலினிருண்டகுழன் மஞ்சரிகள்மிஞ்செரிய ௨௬௬
வைக்குமுகபத்மமுகவட்டமதியிற் றிய
செக்குருகிநெக்குருகி நெற்றிகளின்முத்துதிர ௨௬௭
பாகனையவாய்மொழிகள் பாதிதபோறவொரு
நகமிசைகாடைகள் புறவொலிகள்குகுகுவென ௨௬௮

வரிவழிகள்கடைபுரள மதுரவிதழ்வெளிறவிரு
பரிபுரமுமவனைப்புதிடைபதனமிகடபதனமெலா ௨௬௯
ஆவியொன்றுகூடிரண்டுமாசையொன்றுநேசமொன்று
மேவுசம்ப்ரதாயமொன்று வேளையிந்த்ரபோகம்வந்து ௨௭௰
அந்தவனுபோகபுர மானந்தசமபோகம்
தந்தசுகபோகஞ் சரிப்போகதாய்ப்பெருக ௨௭௧
சோபவிடாய்தீர்த்துச் சுனைநீராளந்துயிர
தாபவிடாயாறி யிருக்குந்தருணத்தில் ௨௭௨
கவ்வியடிபற்றி கடந்திகளங்கமல்லன்
செவ்வியடிபற்றிச் சேனைகளந்தொடர்ந்து ௨௭௩
தென்னனடிபரவத் தேடிவருமேழ்கடல்போல்
மன்னனிருக்கு மலர்ச்சாவில்வந்தனுதி ௨௭௪
கன்னுரைக்கானுமன்னன் காதாரச்சொற்கேட்டு
கன்னூர்புகழ்பெரிய காசமகூனொத்ரதுரை ௨௭௫
மின்னொளிறுத்திவரு மேகமபோலமோகமின்றுள்
தன்னைநிறுத்திவந்து தாவேக்கெந்திரனுன் ௨௭௬
கானிருந்தையன்வரக் கண்டோர்முகங்களெல்லாம்
பானுவரக்கண்ட பயம்போலவாயினவே ௨௭௭
கொண்டல்படிக்குங் கொடைப்பெரியநாகேந்ரன்
தண்டிகைகபிலேறிபரந்த சண்டகப்பூங்கைகைமுன் ௨௭௮
மந்திரிகள்காத்தர்ச மாசேனைமுன்னடக்க
மந்திரிதுரைமக்களுடன் சந்தைபூர்க்கேநமுகமாய் ௨௭௯
வந்தாகவபுரியில் வாழுமகோபிலமால்
செந்திருவின்பாதமலர் சேவித்துக்கொண்டணிட்டு ௨௮௰
தீர்த்தமுடன்மாலை திருவடிபெற்றண்மகிழ்ந்து
வார்த்தைதவராதகண்டன் மால்யானைமீதேறி ௨௮௧
தாரைகவுரி கலண்டைதுடிநாகசுரம்
பேரிகைபெர்காளம் பெரியமேளந்தொனிக்க ௨௮௨
கஞ்சுகிபர்கைப்பிரமபர் கட்டியர்முன்கூட்டி
பெஞ்சைசாகர்வேந்தர் பிரதானிகளங்கமல்லர் ௨௮௩
துங்கர்சுவாமி துரைராசகண்டசய
ரங்காரணவிமராயவத்ரமிண்ட ௨௮௪
தீரசுத்தவிரசுப்ர தீபசார்த்தாசாவலர்க்கு
தாரசத்ருசேதநாபா தாபலச்ரதேசவர்ர ௨௮௫
மகதாநகர்கவுடர் ங்கர் வடகர்லிங்ககுடசர்கொங்கர்
குருதர்வக்துப ியபுமிந்த்ர கொலுவிருந்தபுவனசந்த்ர ௨

சாமிபராக்செச்சரிக்கையெனக்
சோமேதயம்போற் றுளங்குருளை விழற்ற ௨௮௭
பக்கக்கவரிரட்டைப் பாவாடைவீசிவர
மைக்குட்குமரியர்க ளாலாத்திவந்தேந்த ௨௮௮
மாலைசரிய வருவார்சிலமடவார்
சேலைசரிய வருவார்சிலமடவார் ௨௮௯
கண்ணுலவுமலைபத்தார் தருநாளைவேடி
வண்ணவலோ தோற்று வருவார்சிலமடவார் ௨௯௰
தேடுபுகழ்வேந்தனுடன் சென்றுமனதைப்பிடிக்க
ஓடுதல்போலோடிக்கடி யேய்வார்சிலமடவார் ௨௯௧
வல்லியனையாள்பதித்த வாய்வடுவைக்கண்டுதங்கள்
வெல்லிதழிற்பதித்து மீள்வார்சிலமடவார் ௨௯௨
ஒருமானைப்பற்றிவிரைந் தோடிவவாள்வேடதன்
வருமானேனேகமெதிர் வந்துநிற்கப்பாராமல் ௨௯௩
வாழிசருவசித்தி வாரணத்திற்றனிறக்கி
ஆழியனையாள்பொன் னரண்மனைக்குள்வந்திருந்தான் ௨௯௪
இங்கேதுரைப்பெரிய நாகேந்த்ரன்வீற்றிருக்க
அங்கேமலர்க்காவி லன்னநடைப்பெண்பெருமாள் ௨௯௫
பேராளன்பெஞ்சைப் பெரியநாகேந்த்ரதுரை
வாராமைகண்டு மதிமறந்துமெய்சோர்ந்தாள் ௨௯௬
ஆனைதனைக்கா ணு கருமபிடிபோய்ப்பார்ப்பதுபோல்
மானனையாள்தமவர் மண்டபமுந்தீர்த்தனையும் ௨௯௭
தேடினள்முச்செறிந்தாள் செங்கமலத்தாள்சிலப்ப
ஓடினளெங்கோ னுருவெளியைத்தெண்டனிட்டாள் ௨௯௮
என்னிடத்திற்கோப மேதென்றுளெழுந்திருந்தாள்
கன்னல்வலோத்தங்கொருவன் வந்தெதிப்பக்கண்டயர்ந்தாள் ௨௯௯
சாடுருவக்காமனெய்த கைப்பாணஞ்செப்புமுலை
யூடுருவவேலுருவியமான்போலுழன்றாள் ௩௱
காலாயுதக்கொடியோன் கையாயுதவழியே
மாலாயுதமன்ற மாமணியைத்தானுதிர்த்தாள் ௩௱௧
பொற்பகலாமாதவியே புன்னையேசண்பகமே
கற்பகமேயென்னாசைக் கற்பகத்தைக்காணீரோ ௩௱௨
காவரசேயாயிரச்செங் கண்ணரசுபோலிருக்கும்
பூவரசேபெஞ்சைப் புவியரசைக்காணீரோ ௩௱௩
முன்மான்பினோடக்க மோகமாய்ப்பின்றொடரும்
பொன்மானேயென்னாசைப் பூமாலைக்காணீரோ ௩௱௪

தோய்ந்தரவியைத் தொடர்ந்துமுகக்குரிய
காந்தமேயென்றாசைக் காந்தன்வரக்காணீரோ ௩௱௫
என்னிடத்தில்மாலாகி யிச்சைசொல்லிச்சேர்ந்ததுரை
பின்னெனக்கோரந்தரங்கம் பேசாமற்போவானே ௩௱௬
கானிடத்திலுலவக் கண்டுதனியாகவந்து
வானவர்கோனென்னை மனமுருகிச்சேர்ந்தானே ௩௱௭
தந்திரிகொள்வீணை தனையொளித்துவந்துதெய்வ
கந்தருவனேயானுற் கண்ணிமைக்காக்காரியமென் ௩௱௮
இந்திரனேயானுற்கண் ணீராஞ்னூறென்பதுண்டே
கந்தருவனேயானுற் கண்ணிமைக்காக்காரியமென் ௩௱௯
பொய்யுங்குடையான் பெரியநாகேந்திரதுரை
ஐபனணைந்ததல்லா லையமினிவேறுமுண்டோ ௩௱௰
மன்மதனைவென்று வலங்குந்திருவழகை
என்மனதுக்குள்ளேயெழுதவோவந்தகன்றான் ௩௱௰௧
கூடியின்பங்கண்ட குதலைமொழிப்பேதைமனமத்
தேடிமுகமவாடித் தியங்குவளென்றெண்ணானே ௩௱௰௨
இந்தக்கவடுசெய்வா னெனறறிந்தாற்கைகலக்கும்
முந்தக்குடிலமிட்டு மூன்றுனைகொள்ளேனே ௩௧௩
தன்னெஞ்சமபோலத் தழுவிப்பரிந்திருக்க
வன்னெஞ்சியன்றே மறக்கத்துணிந்தானே ௩௧௪
பேரூர்வழியோம் பின்தொடர்வோமென்றாலும்
ஊருமென்றுனிலையேயொன்பதுமொன்றுனே ௩௧௫
என்றிரங்கும்வேலை யிருஞ்சாகலைப்பிரிந்த
அன்றிலெனத்தானே சிறியாளறிவயர்ந்தாள் ௩௧௬
இவ்விடத்தின்மெய்சோர்ந் தியள்கிடக்கவெவ்வேறாய்
அவ்விடத்திற்பூவெடுத்த வாயிழையாரெல்லோரும் ௩௧௭
குன்றிரண்டுதாங்குங் கொடிபோலிடைதுவள
நின்றுமலர்பறித்த நேரிழையைக்காணாமல் ௩௧௮
மறந்றோர்வனமேநாம் வந்ததெனத்திகைத்துச்
சிற்றடியைக்கண்டார் திரண்டாரொருமுகமாய் ௩௧௯
சென்றார்நெடுந்தூரந் தேன்மொழியேதேன்மொழியே
என்றார்மதிமறந்த வேந்திழையைவந்துகண்டார் ௩௨௰
கையணையிற்சாய்ந்து கலைகுலையக்கண்முழிப்பத்
தையல்கிடநீபத்தரியாமற்பாங்கியர்கள் ௩௨௧
தூக்கமோவெம்பசியே தோழியரைக்காணுத
ஏக்கமோமன்மதன்கண் ணேறுபட்டகாரணமோ ௩௨௨

தெய்வகுறை யோசாஞ்செய்வதென்றே நினைத்துக்
கைவாரக்கருத்திற் கட்டியெடுத்தணைத்தார் ௩௨௩
மாத்தளிரசல்லிசிமதிமுகத்தில்வெயர்துடைக்க
எத்திலமுயன்மூர்ச்சைதெளிந் தேக்கினள்போலிருந்தாள் ௩௨௪
ஒண்டொடியார்மங்கை யுடலிற்குறிவிடங்கள்
கண்டிருவேலெகனானார்கள் கன்னிக்குமவாயுமுண்டோ ௩௨௫
கைநடுக்கிக்கால்நடுக்கிக் கன்னியர்களெல்லோரும்
மெய்நடுக்கித்தானே விசாரமிட்டுக்கொண்டுநின்றார் ௩௨௬
வல்லியெனுங்கை மடமானைக்கைகலங்கின்
மெல்லமெல்லத்தாளடத்தி வீட்டிற்கொடுபோனார் ௩௨௭
பாகார்மொழியாளைப் பஞ்சணையிற்சேர்த்திடலும்
மோகவன்னமிற முத்தஞ்சொரிந்தனவே ௩௨௮
[...]ன்னைகயனிவனைகள் மூச்செறியக்காய்த்தருசி
மென்குவளைக்கண்ணீரின் வெள்ளந்தாலாறியதே ௩௨௯
வீசியவேளமமூமெழுகுபாவைக்குருளக்
கூசிகள்போர்பமய வுருக்கூசியுள்ளயர்த்தாள் ௩௩௰
கண்டிசகியார் கருத்திற்சலிப்பாராம்
ஒண்டொடிக்குச்சித வுபசாரஞ்செய்யலுற்றார் ௩௩௧
செய்தவுபசாரமெல்லாந் தேறுள்பொருளாகி
வைதுமடவாரை மனங்கொதித்துச்சொல்லலுற்றாள் ௩௩௨
வேடையெலாத்தீரவென்மேல் வீசுவார்போலவெயிற்
கோடையெலாமென்மீதிற் கொண்டுவந்து விட்டீரே ௩௩௩
சாளரத்தைநீக்கித் தனிப்புலியைப்பாயவிட்டு
நீளுமெலைத்தென்றலென்றீர் கிட்டுரஞ்செய்திட்டீரே ௩௩௪
காமரசமெல்லாங் கன்கமஞ்சமேற்பறப்பிப்
பூமலரென்றீர்மடவீர் பொய்யும்படித்தீரே ௩௩௫
சேலென்றகோதனைத்தோன்றேமாலையைப்பிழிந்து
பாலென்றதந்தீர்பழிக்காளானீரே ௩௩௬
[...]ங்கைநல்லீரென்றன் வனமுலைக்கிநேரணிந்த
குங்குமமுஞ்சாந்துங் குளிர்ந்தபனிநீரும் ௩௩௭
[...]தமபாதனதுபர்பார்சாதமனைசெல்லவிட்டு
[...]மானயாண்மனம்போற்கொதிக்குதென்றாள் ௩௩௮
[...]ன்னபுலம்பியிவள்படும்பாடத்தனையும்
[...]ன்னைக்குச்சொன்னாரவன்பதறியோடிவந்தாள் ௩௩௯
[...]பற்றெடுத்ததன்மகளைப் பேய்க்கிழவியாளுக்
[...]ற்றமறநோக்கிக்குறிப்புறவேகண்டுகொண்டாள் ௩௪௰

செவ்வாயிதழ்க்குறியுஞ் செப்புமுலைமேற்பதித்த
கைவ்வாளுகிர்க்குறியுங் கண்மையழிந்தவுரு ௩௪௧
பார்த்தாளுடன்போன பாங்கியரைச்சண்டையிட்டாள்
வேர்த்தாண்மகளை வெகுண்டாள் விசாரமிட்டாள் ௩௪௨
நீங்களறியாமலிந்த நேரிழைப்பூங்காவில்
ஆங்கொருவன்கூடி யணைந்தவரைசொல்லுமென்றாள் ௩௪௩
போனதுவும்வெவ்வேறாய்ப் பூவெடுக்குங்கைதனி
ஆனதுவுங்கண்டதுவு மாயிழைபார்த்தாருரைத்தார் ௩௪௪
சத்தமுலையாருரைக்கத் தையல்குணமாலைசொல்வாள்
அந்தவனத்திலசுனையுற்றவேலையிலே ௩௪௫
சுற்றியபடிபார்த்தேன் துரைகளடிபோனதிலே
பற்றசங்கோரையுடன் பதுமரேகைகண்டேன் ௩௪௬
அச்சுவடுகண்ட வசுகைமல்லைப்புவனம்
மெய்ச்சுவிலைகோட்டை வேள்பெரியநாகேந்திரன் ௩௪௭
வேட்டைக்குவந்தானு மேளத்தொனியுமத்தக்
காட்டில்வெடித்தொனியுங் காதாரக்கேட்டதென்றாள் ௩௪௮
அப்படியோசொல்லென் னமிர்தகுணமாலைமின்னை
செப்படிவித்தைத்தொழிலிற் சித்திரத்தைக்கண்டானே ௩௪௯
வண்டார்குழலாய் மதன்பெரியநாகேந்த்ரன்.
கண்டானேயின்ற கரும்பைவிட்டுப்போவானோ ௩௫௦
அந்தத்துரையழைக்கச் சண்டாளுகானின்ற
பைங்கொடியுந்தானொருகை பாராமல்மீள்வாளோ ௩௫௧
எம்மையறியாமலிவ ளெப்படிதான்கைகலந்தாள்
நம்மையறியாமலிந்த நாயகனெவ்வாறணைந்தான் ௩௫௨
கன்னமொருவரிட்டாற் காவலனோடேயுரைப்போம்
மன்னவனேயித்தவலுமைசெய்தா லார்க்குரைப்பேன் ௩௫௩
பாகார்மொழியாளைப் பன்றிமலைச்சாரலுக்கு
போகாதேயென்றுசொன்னேனே புத்தியாகெட்டாயோ ௩௫௪
பேய்வார்த்தையானாலும் பெற்றபிள்ளைகேட்பதுண்டு
தாய்வார்த்தைகேளாத தங்கச்சிமுப்பாச்சே ௩௫௫
தெண்டிக்குமன்னவனைச் சேர்ந்தவலுக்காரியைநான்
கண்டிக்கப்போகாதே கள்ளியெனக்கூடாதே ௩௫௬
மாணபரன்பெஞ்சைக்காரானைமருவப்
போனவளேயன்றியிவள் பூவெடுக்கப்போனவளோ ௩௫௭
வித்தைதருமொன்பதூர்வேந்தனுக்குமோகினியா
மந்திரமுண்டென்றன்மதலையறியாளோ ௩௫

தூயபுகழ்ப்பெஞ்சைத் துரைக்குநிகரெப்போன்மட்டவர்
ஆரேமபேருண்டென் றாங்கெழுதியமளோ ௩௫௯
பூக்கொடிசூழ்தன்மலையிற்பூவெடுக்கப்போனவுயிர்ப்
பாங்கிமார்தாமிருக்கப் பாவைதனைச்சேர்வானேன் ௩௬௦
அந்நாளில்வேதனமைத்தபடியேயொழிய
மின்னாரைநோவதுவும் வினையிதற்றுவதும் ௩௬௧
நம்மையறியாம னடந்ததெல்லாம்யாவருக்கும்
சமமதிக்குங்காரியமேதையனடத்திவந்தாள் ௩௬௨
மன்னனழகுந் தென்மகளேமனைவாளாம்
கன்னியழகுக்குமந்தக் காவலனேகாதலனும் ௩௬௩
மாவடுக்கண்மங்கையென்ன மாதவமுன்செய்தாளோ
பூவெடுக்கப்போனாள் புதையலெடுத்துவந்தாள் ௩௬௪
பையப்பழனழுவிப் பாலில்விழுந்ததுதான்
செய்ததவமோமகள்முன்செய்தபூசாபலமோ ௩௬௫
என்றுமகளையிருகைபாற்றான்றழுவி
ஒன்றுக்குமஞ்சாதேயா கழுமுன்பாங்காச்சே ௩௬௬
சிந்தமகூளேந்த்ரனருள் செய்பெரியநாயகனைச்
சொந்தமாய்க்கூடிச் சுகித்துமிகவாழ்ந்திரென்றான் ௩௬௭
காவலவுமின்னே கனகபல்லக்கேற்றியிந்தப்
பூவுலகுகொண்டாடப் புத்திரரைப்பெற்றிரென்றான் ௩௬௮
என்னுமந்தவேளைசில வேதியரையாசூழ்ந்தவர
வன்னமணிப்பொற்சிவிகைவாயில்வரக்கண்டாளே ௩௬௯
கண்டாள்மகளைக்கனகபல்லக்கேற்றியின்பங்
கொண்டாள்குணமாலைக் கூடச்செலவிடுத்தாள் ௩௭௦
சொற்படியேயந்தத் துரைப்பெரியநாயகனும்
கற்பகத்தைக்கூட்டியவள் காதல்கொண்டகாதலியாய் ௩௭௧
பூதலத்தோர்வாழ்த்தநல்ல புத்திரரைப்பெற்றெடுத்து
மாதுநவரத்தின மாலைமகிழ்வுற்றிருந்தாள் ௩௭௨
சீர்வாழிலோகஞ் செழித்துமிகவாழியொன்ப
தூராவாழிவெள்ளையுபயக்கொடிவாழி ௩௭௩
பெருஞ்சைநகர்வாழி பெரியநாகேந்த்ரதுரை
கஞ்சமலர்மாது கருணைபெற்றுவாழியவே ௩௭௪

கூளப்பநாயக்கன்காதல்

முற்றிற்று.